<u>அ.வ.எண். **199/2021** வா.சா.**1** – சிவக்குமார் **04.03.2025**</u>

<u>சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **7**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்குச்சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும், 2ம் பிரதிவாதியும் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பாதுகாப்பிலும், பராமரிப்பிலும்தான் 6, 7 பிரதிவாதிகள் வாழ்ந்து வருகின்றனர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் உடன்பிறந்தவர்கள் 9 முதல் 11 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி, 6, 7 பிரதிவாதிகள் மீது எந்தவித அக்கறையுமின்றி தனித்து வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எல்லோரும் ஒரே வீட்டில் வசித்து வருகின்றனர். 1ம் பிரதிவாதி ஒரு மாற்றுத்திறனாளி. அவருக்கு கண்பார்வை குறைபாடு உள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கண்பார்வை குறைபாடு உள்ளது என்றும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி மற்றவர்களின் துணையின்றி தனியாக அவரால் வெளியே செல்ல முடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி குடும்ப செலவிற்காகவும், 6, 7 பிரதிவாதிகளின் படிப்பு செலவிற்காகவும் ரூ.10 இலட்சத்திற்கு அடமானக்கடன் எழுதிக்கொடுக்க ஒப்புக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. மேற்சொன்ன அடமானக்கடன் ரூ.10 இலட்சத்தை 6, 7 பிரதிவாதிகளின் அஞ்சலக வைப்பீட்டு கணக்கில் வைப்பீடு செய்தேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி ரூ.10 இலட்சம் அடமானக்கடன் வாங்கினார் என்றால் சரியல்ல. நானும், என் அம்மாவும், 2ம் பிரதிவாதியுடன் கூட்டுசேர்ந்து, 1ம் பிரதிவாதியை எங்கள் வீட்டிற்கு வரவழைத்து, மது அருந்த வைத்து, 1ம் பிரதிவாதி சுயநினைவில்லாமல் ....

இருந்தபோது, ஒரு போலியான ஆவணத்தில் கையொப்பம் பெற்றேன் என்றும், அதனால் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வழக்குச்சொத்தை விற்பனை செய்யும் எண்ணத்தில் என்னை அணுகவில்லை என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை பொறுத்து வில்லங்கச்சான்றிதழ் எடுத்து பார்த்தேன். 3, 4 பிரதிவாதிகள் கொடுத்த அடமானக்கடன் பற்றிய விவரம் எனக்கு தெரியும். 3, 4 பிரதிவாதிகள் கொடுத்த அடமானக்கடன் எவ்வளவு வருடத்திற்கு காலக்கெடு உள்ளது என்பது எனக்கு தெரியும். வழக்குச்சொத்து விவசாய நிலம். 3, 4 பிரதிவாதிகள் பெயருக்கு 1ம் பிரதிவாதி அடமான ஆவணத்தை எழுதிக்கொடுத்தபோது, வழக்குச்சொத்தின் சுவாதீனத்தையும் அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் 3, 4 பிரதிவாதிகள் தற்போது விவசாயம் செய்து வருகின்றனர் என்றால் இல்லை. 3, 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதியிடம் தடங்கல் மனு கொடுத்தனர் என்றால் சரிதான். அதன்காரணமாக 5ம் பிரதிவாதி, கிரய ஆவணத்தை பதிவு செய்ய மறுத்துவிட்டார். 1ம் பிரதிவாதி, எனக்கு எதிராகவும், என் அம்மாவுக்கு எதிராகவும் குளித்தலை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் 10 – 15 நாட்கள் கழித்து கொடுத்தார். அந்த புகார் விசாரணை முடிவில், நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுமாறு கூறிவிட்டனர். வழக்குச்சொத்தின் மூல ஆவணங்களை 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் 2ம் பிரதிவாதி என் வசம் ஒப்படைத்தார் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தின் மதிப்பு ரூ.45,00,000/-க்கு மேல் உள்ளது என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகள் அடமானக்கடனை செல் அடைக்க வேண்டும் என்று என்னிடம் ............

கேட்டார்களா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா கிரய ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதியை ஏமாற்றும் நோக்கில், 06.05.2020 அன்று ஒரு கிரய ஆவணத்தை அவசர கதியில் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த கிரய ஆவணம் சம்மந்தமாக நான் செலுத்திய பதிவுக்கட்டணம் விவரம் 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. கிரய ஆவணத்தின் அடிப்படையில், சொத்தின் சுவாதீனம் என் அம்மா வசம் இருந்து வந்தது என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 3, 4 பிரதிவாதிகளின் அடமானக்கடன் முழுவதையும் நான் செலுத்திவிடுகிறேன் என கூறியிருப்பது தவறு என்றால் சரியல்ல. 6, 7 பிரதிவாதிகளின் அஞ்சலக வைப்பீட்டு கணக்கில், தலா ரூ.5,00,000/- வீதம் வைப்பீடு செய்தேன் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. மீதி கிரயத்தொகை ரூ.71,735/-யை 1ம் பிரதிவாதி வசம் ரொக்கமாக நான் கொடுத்தேன் என கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும் சேர்ந்து, கிரய ஆவணம் பதிவு செய்வதற்கு வந்தார் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு, வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். நான் அனுப்பிய அறிவிப்பில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. நான் அனுப்பிய அறிவிப்புக்கு, 6, 7 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்து பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 9 முதல் 11 பிரதிவாதிகளுடன் சேர்ந்து, 8ம் பிரதிவாதிக்கு வழக்குச்சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால் என்னுடைய கிரயத்திற்கு பின்னர் விற்பனை ..........

செய்துள்ளார். கிரய தேதியன்றே சுவாதீனத்தையும் ஒப்படைத்துவிட்டனர் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரயம் பெயரளவிலானது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.

**அ.வ.எண். 199/2021 வா.சா.2 – செந்தில் 04.03.2025**

**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் வாதியின் உறவினர் அல்ல. வாதியின் வீட்டில் நான் கட்டிட வேலை செய்யும் மேஸ்திரி. நான் பிரதிவாதியின் வீட்டிலும் வேலை செய்வேன். வாதியையும், அவரது மகன் வா.சா.1 ஐயும் எனக்கு 10 வருடங்களாக தெரியும். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாதிக்கு கிரயம் செய்துக்கொடுத்துவிட்டார் என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் சொத்து எங்குள்ளது என்று எனக்கு தெரியும். அதன் புல எண் எனக்கு தெரியாது. 2020ம் வருடம் 1ம் பிரதிவாதியை, வாதி அவரது வீட்டிற்கு வரவழைத்து, மது அருந்த வைத்து, 1ம் பிரதிவாதி சுயநினைவில்லாமல் இருந்தபோது, அவரிடம் கையெழுத்து பெறப்பட்டது என்றால் சரியல்ல. கிரயத்தொகை முழுவதும் பெற்றுக்கொண்டுதான், கிரயம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எந்தக்காலத்திலும் அவர் சொத்தை விற்பனை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் ஆவணம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாதிக்கு தெரிந்தவர் என்பதால், நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட நீதிபதி,
கரூர்.